பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4
13 07 2025 **SUNDAY** 7 15 **PM**
வணக்கம், ஆகாஷவாணி - <u>செய்திகள்</u>

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. பிரம்மோஸ் ஏவுகணையை வாங்குவதற்கு வெளிநாடுகள் ஆர்வம் காட்டுவதாக பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் கூறியுள்ளார்.

2. பயணிகளின் பாதுகாப்பை மேம்படுத்தும் நோக்கில் ரயில் பெட்டிகளில் கண்காணிப்பு கேமராக்களை பொருத்த முடிவு செய்யப்பட்டுள்ளதாக ரயில்வே தெரிவித்துள்ளது..

3. உற்பத்தியுடன் இணைந்த ஊக்கத்தொகை வழங்கும் திட்டத்தின் காரணமாக, மருந்து மற்றும் மின்னணுப் பொருட்கள் துறை பெரும் வளர்ச்சி கண்டுள்ளதாக மத்திய அரசு கூறியுள்ளது.

4. பழம்பெரும் திரைப்பட நடிகர் கோட்டா சீனிவாச ராவ் மறைவுக்கு தலைவர்கள் பலர் இரங்கல் தெரிவித்துள்ளனர்.

5. இங்கிலாந்துக்கு எதிரான மூன்றாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் இந்தியா வலுவான நிலையில் உள்ளது.

**>>>>>><<<<<<**

ஆப்பரேஷன் சிந்தூர் வெற்றியில் பிரம்மோஸ் ஏவுகணை முக்கியப் பங்கு வகித்ததாக பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் கூறியுள்ளார்.

இன்று லக்னோவில் உத்தரபிரதேச முன்னாள் முதலமைச்சர் சந்திரபானு குப்தாவின் சிலையை திறந்து வைத்து அவர் பேசினார்.

பிரம்மோஸின் வெற்றி காரணமாக அவற்றை வாங்குவதற்கு வெளிநாடுகள் தற்போது அதிக ஆர்வம் காட்டுவதாக அவர் கூறினார்.

14 நாடுகள் பிரம்மோஸ் ஏவுகணையை இறக்குமதி செய்வதற்கு விருப்பம் தெரிவித்துள்ளதாகவும், இவை லக்னோவிலிருந்து ஏற்றுமதி செய்யப்படும் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

**>>>>>><<<<<<**

ரயில் பெட்டிகளில் கண்காணிப்பு கேமராக்களை பொருத்துவதென ரயில்வே முடிவு செய்துள்ளது.

பயணிகளின் பாதுகாப்பை மேம்படுத்தும் நோக்கில் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளதாக ரயில்வேயின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

இதுதொடர்பாக ரயில்வே அமைச்சர் திரு. அஷ்விணி வைஷ்ணவ் மற்றும் அத்துறைக்கான இணையமைச்சர் திரு. ரவ்னீத் சிங் பிட்டு ஆகியோர் ஆய்வு மேற்கொண்டனர்.

இதன் பின்னர், 74 ஆயிரம் பெட்டிகளில் கண்காணிப்பு கேமராக்களை பொருத்த அமைச்சர் ஒப்புதல் அளித்துள்ளதாக அந்த செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ரயில் பெட்டிகளின் பொதுப் பயன்பாட்டு இடங்களில் இந்த கேமராக்கள் பொருத்தப்படவுள்ளதாகவும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**>>>>>><<<<<<**

உற்பத்தியுடன் இணைந்த ஊக்கத்தொகை வழங்கும் திட்டத்தின் காரணமாக, மருந்து மற்றும் மின்னணுப் பொருட்கள் துறை பெரும் வளர்ச்சி கண்டுள்ளது.

இந்த திட்டத்தின் கீழ், இரு துறைகளுக்கும் 10 ஆயிரத்து 114 கோடி ரூபாய் அளவிற்கு ஊக்கத்தொகை வழங்கப்பட்டிருப்பதாக மத்திய அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

இதில் மின்னணுப் பொருட்கள் துறைக்கு மட்டும் 5 ஆயிரத்து 732 கோடி ரூபாயும், எஞ்சிய 2 ஆயிரத்து 328 கோடி ரூபாய் மருந்து துறைக்கும் ஊக்கத்தொகை வழங்கப்பட்டுள்ளதாக அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**>>>>>><<<<<<**

ஞாயிறு தோறும் சைக்கிள் பயிற்சி இயக்கத்திற்கான மக்கள் ஆதரவு தொடர்ந்து அதிகரித்து வருவதாக மத்திய விளையாட்டுத்துறை அமைச்சர் திரு. மன்சுக் மாண்டவியா கூறியுள்ளார்.

குஜராத் மாநிலம், காந்திநகரில் இந்த இயக்கத்தின் கீழ் நடைபெற்ற சைக்கிள் பேரணியில் பங்கேற்று அவர் பேசினார்.

நாடுமுழுவதும் 7 ஆயிரம் இடங்களில் இன்றைய தினம் சைக்கிள் பேரணி நடைபெற்றதை அவர் சுட்டிக்காட்டினார்.

குறிப்பாக, இளையோர் சைக்கிள் பயிற்சியில் கூடுதல் ஆர்வம் செலுத்தி வருவதாக திரு. மன்சுக் மாண்டவியா தெரிவித்தார்.

>>>>>><<<<<<

நேரடி வரி வசூல் கடந்த 10 ஆண்டுகளில் 274 சதவீதம் அதிகரித்துள்ளதாக மத்திய அரசு கூறியுள்ளது.

வரி செலுத்துவோரின் எண்ணிக்கையும் 133 சதவீதம் அதிகரித்துள்ளதாக நிதியமைச்சகம் கூறியுள்ளது.

கூடுதலாக கட்டப்பட்ட வரி திருப்பி செலுத்தப்படுவதற்கான காலஅவகாசம் 93 நாட்களிலிருந்து தற்போது 17 நாட்களாக குறைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

>>>>>><<<<<<

தமிழகத்தின் திருவள்ளூர் ரயில் நிலையம் அருகே சரக்கு ரயில் தடம் புரண்டு தீ விபத்துக்குள்ளான பகுதியில் மீட்புப் பணிகள் முழுவீச்சில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

தீயணைப்புப் படை வீரர்கள் சுமார் 7 மணி நேரம் போராடி தீயை அணைத்ததாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

(வாய்ஸ் பைட் - தனசேகரன் 50 செகண்ட்ஸ்)

இந்த விபத்து காரணமாக, இந்த வழித்தடத்தில் போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளது.

சில ரயில்களின் இயக்கம் முழுமையாகவும், சில ரயில்களின் சேவை பகுதி அளவும் ரத்து செய்யப்பட்டுள்ளன.

இதுகுறித்த விவரங்களை பொதுமக்கள்

0 4 4 – 2 5 3 5 4 1 5 1

0 4 4 – 2 4 3 5 4 9 9 5

ஆகிய தொலைபேசி எண்களை தொடர்பு கொண்டு அறிந்து கொள்ளலாம் என்று தெற்கு ரயில்வே கூறியுள்ளது.

>>>>>><<<<<<

பழம்பெரும் திரைப்பட நடிகர் கோட்டா சீனிவாச ராவ் மறைவுக்கு பிரதமர் திரு. நரேந்திர மோடி இரங்கல் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக சமூகவலைதளத்தில் அவர் விடுத்துள்ள செய்தியில், திரைப்பட துறையில் பல சாதனைகளை படைத்த அவர், பன்னோக்குத் திறன் கொண்டவர் என்று புகழாரம் சூட்டியுள்ளார்.

சமூக சேவையிலும் ஆர்வத்துடன் பணியாற்றிய அவர், ஏழைகளின் மேம்பாட்டிற்காக பாடுபட்டவர் என்றும் பிரதமர் கூறியுள்ளார்.

தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகனும், கோட்டா சீனிவாச ராவ் மறைவுக்கு இரங்கல் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் விடுத்துள்ள செய்தியில், ஒருங்கிணைந்த ஆந்திராவின் பிஜேபி சட்டப்பேரவை உறுப்பினராக பணியாற்றியவர் கோட்டா சீனிவாச ராவ் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

ஆந்திர முதலமைச்சர் திரு. சந்திரபாபு நாயுடு மற்றும் தலைவர்கள் பலர், கோட்டா சீனிவாச ராவ் மறைவுக்கு இரங்கல் தெரிவித்துள்ளனர்.

>>>>>><<<<<<

புதுச்சேரியில் புதிய அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ள திரு. ஜான்குமார் நாளை பதவியேற்கவுள்ளார்.

ராஜ்நிவாஸில் பிற்பகல் ஒன்றரை மணியளவில் நடைபெறவுள்ள நிகழ்ச்சியில், துணை நிலை ஆளுநர் திரு. கைலாசநாதன், அவருக்கு பதவிப்பிரமாணம் செய்து வைக்கிறார்.

சட்டப்பேரவைக்கு புதிதாக நியமிக்கப்பட்ட மூன்று நியமன உறுப்பினர்களும் நாளை பதவியேற்கவுள்ளதாக ஏஜென்ஸி செய்திகள் தெரிவிக்கின்றன.

பேரவைத் தலைவர் திரு. செல்வம், புதிய உறுப்பினர்களுக்கு பதவிப்பிரமாணம் செய்து வைக்கவுள்ளார்.

>>>>>><<<<<<

அருணாச்சலப்பிரதேசத்தில் இளையோர் மேம்பாட்டு திட்டங்களுக்கு கூடுதல் முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளதாக அம்மாநில முதலமைச்சர் திரு. பெமா கண்டு கூறியுள்ளார்.

இட்டா நகரில் நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், அனைத்து துறைகளிலும் இளையோர் சாதனை படைக்க வேண்டும் என்ற நோக்கில் தமது அரசு செயல்பட்டு வருவதாக கூறினார்.

இதற்காக செயல்படுத்தப்பட்டு வரும் திட்டங்களையும் திரு. பெமா கண்டு பட்டியலிட்டார்.

>>>>>><<<<<<

உத்தரபிரதேசத்தில் 75 சிறிய ஆறுகளை புனரமைக்கும் பணிகளை அம்மாநில அரசு தொடங்கியுள்ளது.

நவீன தொழில்நுட்பத்துடன் ஒருங்கிணைந்த வகையில் இதற்கான பணிகள் தொடங்கப்பட்டுள்ளதாக உத்தரபிரதேச அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

10 முக்கிய துறைகள் ஒருங்கிணைந்து இப்பணிகளை மேற்கொண்டு வருவதாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

>>>>>><<<<<<

அமெரிக்காவில், காலிஸ்தான் தீவிரவாத அமைப்பைச் சேர்ந்த 8 பேரை அந்நாட்டு காவல்துறையினர் கைது செய்துள்ளனர்.

அவர்களிடமிருந்து ஆயுதங்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளதாக அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

சர்வதேச தீவிரவாத கட்டமைப்புகளுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்டு வரும் நடவடிக்கையின் ஒரு பகுதியாக இவர்கள் கைது செய்யப்பட்டிருப்பதாக அமெரிக்கா கூறியுள்ளது.

>>>>>><<<<<<

நாட்டின் ஒரு சில பகுதிகளில் அடுத்த சில தினங்களுக்கு கனமழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

மத்தியப்பிரதேசம், கேரளா, கர்நாடகா ஆகிய மாநிலங்களுக்கு உட்பட்ட ஒரு சில பகுதிகளில் அடுத்த 3 தினங்களுக்கு கனமழைக்கு வாய்ப்புள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அஸ்ஸாம், மேகாலயா, நாகாலாந்து, மணிப்பூர், மிஸோரம், திரிபுரா மற்றும் அருணாச்சலப்பிரதேசத்திற்கு உட்பட்ட ஒரு சில பகுதிகளில் அடுத்த 5 தினங்களுக்கு கனமழை பெய்யக்கூடும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

கேரளா, கர்நாடகா, லட்சத்தீவு மற்றும் மத்திய மேற்கு வங்கக்கடல் பகுதிகளில் மீனவர்கள் மீன்பிடிக்க செல்ல வேண்டாம் என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

>>>>>><<<<<<

இங்கிலாந்துக்கு எதிரான மூன்றாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் இந்தியா வலுவான நிலையில் உள்ளது.

லண்டன் லார்ட்ஸ் மைதானத்தில் நடைபெற்று வரும் இப்போட்டியின் நான்காம் நாளான இன்று, விக்கெட் இழப்பின்றி 2 ரன் என்ற நேற்றைய ஸ்கோருடன், இரண்டாவது இன்னிங்ஸை தொடர்ந்து ஆடிவரும் இங்கிலாந்து சற்றுமுன்வரை 4 விக்கெட் இழப்புக்கு 141 ரன் எடுத்துள்ளது.

>>>>>><<<<<<

இந்தியாவுக்கு எதிரான முதலாவது இளையோர் டெஸ்ட் கிரிக்கெட் போட்டியின் இரண்டாவது நாளான இன்று இங்கிலாந்து முதல் இன்னிங்ஸில் சற்றுமுன்வரை 2 விக்கெட் இழப்புக்கு 55 ரன் எடுத்துள்ளது.

**Beckenham-**ல் நடைபெற்று வரும் இபபோட்டியில் இந்தியா முதல் இன்னிங்ஸில் 540 ரன்னுக்கு ஆட்டமிழந்தது.

>>>>>><<<<<<

ஆசிய கோப்பை மகளிர் கூடைப்பந்து சாம்பியன் போட்டி இன்று சீனாவின் **Shenzhen-**ல் தொடங்கியது.

இந்தியா முதல் ஆட்டத்தில் 85-68 என்ற புள்ளிக்கணக்கில் கஜகஸ்தானை வென்றது

>>>>>><<<<<<

ஐரோப்பிய ஜூனியர் ஸ்குவாஷ் சாம்பியன் போட்டியில் இந்தியாவின் **Shreyansh Jha** பட்டம் வென்றார்.

ஜெர்மனியில் நடைபெற்ற இப்போட்டியின், 15 வயதுக்குட்பட்டோருக்கான ஆடவர் ஒற்றையர் பிரிவு இறுதியாட்டத்தில் அவர் 9-11, 11-3, 11-7, 11-6 என்ற செட்கணக்கில் போலந்தின் **Lohmann-**ஐ வென்றார்.

>>>>>><<<<<<

16 வயதுக்குட்பட்டோருக்கான ஆசிய வாலிபால் சாம்பியன் போட்டியில் இந்தியா, ஆஸ்திரேலியாவை வென்றது.

தாய்லாந்தில் நடைபெற்று வரும் இப்போட்டியின் இரண்டாவது ஆட்டத்தில் இந்தியா 25-16, 25-17, 25-18 என்ற புள்ளிக்கணக்கில் ஆஸ்திரேலியாவை வென்றது.

இப்போட்டியின் முதல் ஆட்டத்தில் இந்தியா – தாய்லாந்தை வென்றது.

**>>>>>><<<<<<**

ஆசிய ஜூனியர் **Pickleball** சாம்பியன் போட்டி வியட்நாமில் இன்று தொடங்கியது.
இந்தியா சார்பில் 4 பிரிவுகளில், 32 பேர் இதில் பங்கேற்றுள்ளனர்.

**>>>>>><<<<<<**

விம்பிள்டன் ஜூனியர் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் **Jensi** இரண்டாவது சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

**>>>>>>END<<<<<<**